இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

2026 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2026 ஒற்றோபர் மாதம் 30 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்ெகாள்ளலாம்

விலை : ரூபா 20.00 **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2026 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 11/2026

(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

218 ஆம் அத்தியாயத்தின் 54அ என்னும் பிரிவைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 54அ, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: -

(1) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியில், "எரோயின் அல்லது கொக்கேய்ன் அல்லது மோபின் அல்லது அபின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் அல்லது மெத்தம்பெட்டமைன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(அஅ) ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் மற்றும் மெத்தம் பெட்டமைன் தவிர, மூன்றாம் அட்டவணையின் பாகம் I இல் அ, ஆ, இ, ஈ மற்றும் உ என்னும்

தொகுதிகளில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுட தத்தை உற்பத்திசெய்கின்ற எவரேனுமாள், இக்கட்டளைச் சட்டத்துக்கு எதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் யூரர் சபையொன்றில்லாது, மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54அஅ என்னும் பிரிவைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 54அஅ, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "எரோயின், கொக்கேய்ன், மோபின் அல்லது அபின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் அல்லது மெத்தம்பெட்டமைன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) பிரிவுகள் 84 மற்றும் 85 இன் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, 54அஅ என்னும் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழான மற்றும் 54ஆ

என்னும் பிரிவின்கீழான தவறொன்றுக்கு சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர் –

(அ) பிரிவு 77அ என்பதன்கீழ் அரசாங்கப் பகுப்பாய்வாளரால் வழங்கப்படும் அறிக்கையின் நியதிகளின்படி, கடத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது உடைமையிலுள்ள அபாயகரமான அவுடதத்தின் தூய அளவு நூறு கிராம்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்ற போது அல்லது, அத்தகைய அறிக்கை இல்லாமையில், கடத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது உடைமையிலுள்ள அத்தகைய அபாயகரமான அவுடதத்தின் மொத்த அளவு நூறு கிராம்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்றபோது; அத்துடன்

(ஆ) மரண தண்டனை அல்லது ஆயுட்கால மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதாகவுள்ளபோது,

விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாற்றவிர பிணையில் விடப்படுதலாகாது:

ஆயின் எவ்வாறாயினும், மேன்முறையீட்டு நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் நீதிநெறிக்கவனத்துக்கு எடுத்து நியாயாதிக்கத்தைப் பொறுப்பேற்கின்ற விடத்து, அத்தகைய நீதிமன்றம், அதனது தற்றுணிபைப் பிரயோகிக்கையில், கருமமானது இயைபான மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டுமென பணித்தாலொழிய, அபாயகரமான அவுடதத்தின் தூய அளவு நூறு கிராம்களுக்குக் குறைவாகவுள்ளதென 77அ என்னும் பிரிவின்கீழ் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால்

வழங்கப்பட்ட அறிக்கை அடுத்துப்பின்னராக வெளிப் படுத்துகின்றமை எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கருமம் தொடர்பில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்ப தற்கு அத்தகைய மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடருதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான மூன்றாம் அட்டவணை யைத் திருத்துதல்

5. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையில் பாகம் 1 இன் குழு 'ஆ' இன் 1 ஆம் பிரிவில் -

(அ) அதன் 26 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"26	கனாபிஸ்	கனாபிஸ் செடியின் பூ அல்லது அரும்பின் மேற்பகுதியின் (வடிக் கப்படாத பிசின்)";

(ஆ) அதன் 26 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"26அ	கனாபிஸ்	கனாபிஸ் சற்றிவா எல்.
26ஆ	கனாபிஸ்	கனாபிஸ் சற்றிவா எல். இனது ஏதேனும் கலனிகல் தயாரிப்பு"; அத்துடன்

(இ) அதன் 27 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"27	கனாபிஸ் பிசின் பிரித் தெடுக்கப்பட்ட பகுதிகள் மற் றும் ரிங்க்சர்கள்	கனாபிஸ் செடியிலிருந்து பெறப்படும் புறம்பாக்கப்பட்ட பிசின் (பண்படாத அல்லது சுத்திகரிக்கப்பட்ட)"; அத்துடன்

(2) அவ்வட்டவணை பாகம் III இல் –

(அ) "(பிரிவு 54அ)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(பிரிவுகள் 54அ மற்றும் 54அஅ)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அட்டவணையிலுள்ள பட்டியலில், "கனபிஸ்" என்னும் உப தலையங்கத்திற்குப் பதிலாக, "கனாபிஸ் / கனாபிஸ் சற்றிவா எல்./ கனாபிஸ் சற்றிவா எல். இனது ஏதேனும் கலெனிகல் தயாரிப்பு" என்னும் உப தலையங்கத்தை இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.